[1992 மார்ச் 12

188—

புறவழிச்சாலை அமைத்தல்

*4247—திரு. கே. பி. ராஜு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை 47-ல் மதுக்கரையிலிருந்து சின்னியம்பாளையம் வரை புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கு மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படு கிறது.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து கள் அதிகமாக உள்ளன. தமிழ்நாடு, கேரளா இரண்டையும் இணைக்கின்ற தேசிய நெடுஞ்சாலையே 47 தான். அதுமட்டு மல்லாது, கர்நாடகா, சென்னை, ஆந்திரா போன்ற பகுதிகளுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு, கேள்வி கேளுங்கள். கேரளாவை இணைப்பது என்பது உறுப்பினர்கள் அனைவருக்குமே தெரியும்.

திரு. கே. பி. ராஜு : அந்தப் பகுதிகளை எல்லாம் இணைக் கின்ற ஒரே நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலை. இருபது வருடங்களாக அந்த ரோடு போடுகிறேன், போடுகிறேன் என்று சொல்லிவிட்டு இன்னும் போடாமல் இருக்கிறார்கள். அதனு டைய உண்மை நிலைமை என்ன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே , மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த புற வழிச்சாலை அதாவது பை-பாஸ் சாலை என்பது மிகவும் முக்கிய மான சாலை என்பதை இந்த அரசு நன்றாக அறியும். ஏறத் தாழ தேசிய நெடுஞ்சாலை 47-ல் கிலோ மீட்டர் 141/3 முதல் 171/2 வரை 27.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு கோயம்புத்தூ

ள்ள

1992 மார்ச் 12]

புறவழிச்சாலை அமைப்பதற்குத் தேவையான நிலம் கையகப் படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வேலைக்கான தொழில் நுட்ப கருத்துரு மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு சாலை அமைக்கும் வேலைக்கான மதிப்பீடு ஏறத்தாழ 11 கோடியே 40 இலட்சம் அளவிலே தயாரிக்கப்பட்டு இன்று மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்பு மிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் ஏற்கெனவே நம் முடைய பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசுகின்ற நேரத்திலே இந்தத் திட்டங்களையெல்லாம் ஏற்கெனவே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு நான் டெல்லிக்கு சென்று நம்முடைய தரை போக்குவரத்து அமைச்சர் ஜகதீஷ் டைட்லர் அவர் களிடத்திலே சந்தித்துப் பேசுகின்ற நேரத்திலே இந்த புறவழிச் சாலையின் முக்கியத்துவத்தை பேசியிருக்கிறேன். ஆகவே, அவரும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருக்கின்றார். ஆகவே மத்திய அரசும், மாநில அரசும் இந்த புறவழிச்சாலையை அமைப் பதற்கான முனைப்பான நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது. ஆகவே நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றித்தரப்படும். அதற்கான முயற்சிகளைக் கடுமையாக மேற்கொண்டு இருக்கிறோம். அந்த முக்கியத் துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜூ : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில உறுப்பினர்கள் மத்திய அரசு பணம் ஒதுக்கிவிட்டது. மாநில அரசுதான் இன்னும் பணம் ஒதுக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால்தான் வேலை தாமதப்படு கிறது என்று சொல்கிறார்கள். அதனால் உண்மை நிலையை அறிவதற்காகக் கேட்டேன். ஏனென்று கேட்டால் எல்லா மாநிலங் களிலிருந்து வருகின்ற லாரிகள், பஸ்கள் அத்தனை வாகனங் களும் கோவை நகரத்தில் வந்து செல்வதால் குழந்தைகள் நேரத்திற்கு பள்ளிக்கூடம் செல்ல முடிவதில்லை. ஆலைகளுக்குச் செல்பவர்கள் நேரத்திற்கு போக முடியவில்லை. ஒரு இடத்தை கடப்பதற்கு ஒரு மணி இரண்டு மணி நேரம் ஆகிவிடுகிறது. ஒரே ஒரு பாலத்தின் வழியாகத்தான் பாலக்காட்டுக்குச் செல்ல வேண்டும். போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற கார ணத்தினால் இந்த ஆண்டிலாவது முயற்சி செய்து புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்த நெடுஞ்சாலையைப் போடு கின்ற திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்கான என்னென்ன முயற்சி கள் எடுத்தோம் என்பதைச் சொல்லியிருக்கிறேன். தேசீய நெடுஞ் சாலைகளைப் பொறுத்தமட்டிலே மத்திய அரசு நிதி வழங்கு

கின்றது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே மாநில அரசும் சரி மத்திய அரசும் சரி இதிலே கருத்து வேறுபாடு கிடையாது. நிச்சயமாக இந்த புறவழிச் சாலையை அமைக்க வேண்டுமென்று இரண்டு அரசுகளுக்கும் நோக்கம் இருக்கிறது. நாங்கள் ஏற்கெனவே பேச்சுவார்த்தையிலே தெளிவுபடுத்தி இருக்கிறோம். ஆகவே நிச்சயமாக அந்தப் பணி இந்த ஆண்டு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. நிச்சயமாக உறுப்பினர் நம்பலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 189, திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

189—

குளித்தலையில் பேருந்து நிலையம் கட்டுதல்

*330—திரு. அ. பாப்பா சுந்தரம் :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை பேரூராட்சிக்குச் சொந்தமாக பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குளித்தலை பேரூராட்சிக்குச் சொந்தமாக பேருந்து நிலையக் கட்டிடம் கட்டும் திட்டம் மாவட்ட அளவில் உள்ளது.

(ஆ) அரசு அளவில் பரிசீலிக்கும் கட்டத்தை அடையவில்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை என்பது நகராட்சியாகவும் இருக்கிறது. அந்த நகரத்திற்கு இதுவரையிலும் எந்தவித பேருந்து நிலையமும் இல்லை. ஆகவே, அந்த நகருக்கு பேருந்து நிலையம் கட்டுகின்ற முறையிலே முந்தைய தி.மு.க. ஆட்சியிலே நிலங்களை கையகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அப்போது நிலங்களைக் கையகப்படுத்த முடியாமல் போய்விட்டது. எனவே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலாவது ஏதாவது ஒரு இடத்தை கையகப்படுத்த அரசு முயற்சித்து இருக்கிறதா? இடத்தை கையகப்படுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
VAIMAIYE VELLUM
TRUTH ALONE TRIUMPHS